அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2025
# தமிழ் - ஆண்டு 11

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

மாந்தன் தொடக்க காலத்தில் சைகை மொழியினூடாகவே தகவல்களைப் பரிமாற்றிக் கொண்டான். நாளடைவில் உடல்மொழி பேச்சு மொழியாக மாறியது. பேசத் தொடங்கிய பின்பு மாந்தனின் அறிவு வளர்ச்சியடைந்தது. அந்த அறிவின் பலனாக இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவ்வாறு தோன்றிய இலக்கியங்களின் செல்வாக்கு காலங்காலமாக குமுகத்தில் நிலைத்து நிற்கிறது எனலாம். அந்த வரிசையில் உலகளாவிய மட்டத்தில் அறியப்பட்ட இலக்கியமே திருக்குறளாகும். மாந்த வாழ்விற்குத் தேவையான அனைத்துக் கருத்தியல்களும் இதில் செவ்வனே பேசப்பட்டுள்ளன என்ற கருத்து ஏற்கத்தக்கதாகும். குமுகத்தில் பல்லினக் கலாசாரம் என்பது முதன்மையானதாகும். பல இன, மத, மொழி பேசுபவர்களுக்கிடையில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுவது இயல்பேயாகும். அவர்களுக்கிடையில் தனித்துவமான கலாசார பண்புகளும் மிளிர்ந்து நிற்கின்றன. அவரவர் பண்பாட்டு நிகழ்வுகளில் மாற்றங்கள் காணப்படுகின்றன. தாம் பேசுகின்ற மொழிகளுக்கிடையில் பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு போன்ற வேறுபாடுகளையும் கொண்டுள்ளனர். அவர்களின் நடை, உடை, பாவனை என பலவற்றிலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.